# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு2029 வைகாசி 25 (08-06-1998) திங்கட்கிழமை UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:164


10 JUN 1998

# யுத்த செய்தி தடை உத்தரவு: நீக்க அரசிடம் கோரிக்கை!

## உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கண்டனம்

கொழும்பு, ஜூன் 8

**அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் யுத்தச் செய்திகளை பிரசுரிப்பதற்கான அரசாங்கத்தின் தடை உத்தரவு பிரகடனம் உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் கண்டனத்துக்கு உள்ளாகி இருக்கிறது. தடை உத்தரவை ரத்துச் செய்யுமாறு அரசாங்கத்திடம் பல பொது அமைப்புக்கள் கோரியுள்ளன.**

யுத்தச் செய்திகளைப் பிரசுரிப்பதற்கான தடை உத்தரவை ஜனாதிபதி கடந்த வெள்ளிக்கிழமை விடுத்தது தெரிந்ததே.

இந்தத் தடை உத்தரவுக்குக் கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில வாரப்பத்திரிகைகள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

யுத்த நிலைமை தொடர்பான கட்டுரைப்பக்கத்தை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குஞ்சுக்குளம் பகுதியில் தாக்குதல்

கொழும்பு, ஜூன் 8

குஞ்சுக்குளத்துக்கு வடமேற்கே விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை அவதானித்த படையினர் அவர்களுடன் சிறிய ஆயுதங்களைக் கொண்டு மோதினார்கள். இதில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இதே பகுதியில் படைவீரர் ஒருவர் விடுதலைப் புலிகளின் நிலக்கண்ணியினால் காயமடைந்துள்ளார்.

படையினர் தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-9)

## யுத்தச் செய்திகளுக்கு தடை விதித்து புலிகளைத் தோற்கடிக்க முடியாது

### ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 8

''யுத்தச் செய்திகள் மீது தடை விதிப்பது மூலம் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியாது.''

எதிர்க்கட்சித் தலைவரும் ஐ. தே. க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று முன்தினம் இரத்தினபுரியில் ஐ. தே. க. உறுப்பினர்கள் மத்தியில் அவர் உரையாற்றும்போது யுத்தம் விரைவில் முடிவுக்குகொண்டு வரப்படும் என்றும் —

மாங்குளம், கிளிநொச்சிப் பகுதிகள் தனது கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் —

கூறிய அரசு தான் இன்று யுத்தச் செய்தி தடையை அமுல்படுத்துகின்றது.

யுத்தச் செய்திகள் மீது தடை விதிப்பது மூலம் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியாது.

யுத்தக் குறைபாடுகள் மற்றும் பின்னடைவுகள் தான் இந்தத் தடைக்குக் காரணமாக உள்ளன.

தடைக்குப் பதிலாக யுத்த குறைபாடுகள், பின்னடைவுகள் ஆராயப்பட வேண்டும். அதற்குக் காரணமானவர் பதவி விலக வேண்டும் என்றார். (இ-3-10-21)

## ரோந்துசென்ற படையினர் மீது மன்னாரில் தாக்குதல்

### ஒரு பொலீஸார் காயம்

கொழும்பு, ஜூன் 8

மன்னார் மாவட்டத்திலுள்ள சக்திகம என்ற இடத்தில் ரோந்தில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது விடுதலைப் புலிகள் சிறிய ஆயுதங்களைக் கொண்டு தாக்கினர் என்று ரூபவாஹினி தெரிவித்தது.

பொலீஸாரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இச்சம்பவத்தில் ஒரு பொலீஸார் காயமடைந்ததாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-9)

## ஜனாதிபதி பேச்சும் தணிக்கையா?

கொழும்பு, ஜூன் 8

''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையில் பாதுகாப்பு நிலைமை தொடர்பான கட்டுரையில் ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் கொழும்பில் பேசிய பேச்சுக் ஒன்றும் இடம்பெற்றிருந்தது. அதையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தணிக்கை செய்து விட்டார்கள்.

''சண்டே ரைம்ஸ்'' பாதுகாப்புத்துறைச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த வெள்ளிக்கிழமை இரவு பி. பி. ஸி. சிங்கள சேவையின் செய்தி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் ஒலிபரப்பப்பட்டது. தற்போது வன்னிப் போரில் ஏற்பட்ட சேதம் குறித்தும், இறந்தவர்களின் எண்ணிக்கை குறித்தும் அந்தச் செய்தியில் ஒலிபரப்பப்பட்டது.

அந்தச் செய்தி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பப்பட்டதால் எல்லோரும் அதைக் கேட்டார்கள்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வாஜ்பாய் இலங்கை வருவதற்கு முன் இனப்பிரச்சினை குறித்து ஆராய்வார்

### புத்திஜீவிகளைச் சந்திக்க ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 8

அடுத்த மாதம் கொழும்பில் நடக்கவிருக்கும் சார்க் மாநாட்டில் கலந்துகொள்ள வர இருக்கும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இலங்கைவர முன்னர் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்திய—இலங்கை புத்திஜீவிகள் சமயப்பிரமுகர்கள் ஆகியோருடன் பேசவிருக்கிறார்,

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக பிரதமர் வாஜ்பாயுடன் பேச இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள புத்திஜீவிகள் மற்றும் இந்து சமய அமைப்புப் பிரதிநிதிகள் விருப்பம் தெரிவித்தனர்.

பிரதமர் வாஜ்பாய் இலங்கை வரமுன்னர் இவர்களுடன் பேச்சு நடத்த பி. ஜே. பியின் தமிழ் நாடு கிளை நடவடிக்கை எடுதது வருகிறது. (இ-3-164)

## புலிகளுக்கு எதிராக கதிர்காமர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 8

'' விடுதலைப் புலிகள் இயக்கம் உலகம் முழுவதிலும் உள்ள தனது முன்னணி அமைப்புக்கள் மூலம் யுத்தத்தை நடத்துவதற்கு பணம் சேகரித்து வருகின்றது. இதற்கு நம்பகமான சான்றுகள் உள்ளன.''

இப்படி வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

சமூக, சமய, கலாசார, கல்வி, மனிதாபிமான அமைப்புக்கள் என்ற போர்வையில் இந்த நிதி சேகரிக்கப்படுகின்றது எனவே புலிகளின் இந்த அமைப்புக்களுக்கு எதிராக சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அவுஸ்திரேலியாவில் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் வெளிநாட்டமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## தபால் ஊழியர் சங்கம் மீண்டும் வேலை நிறுத்தத்தில் இறங்க முஸ்தீபு

கொழும்பு, ஜூன் 8

தபால், தொலைத்தொடர்பு ஊழியர் சங்கம் மீண்டும் வேலை நிறுத்தத்தில் குதிக்க முஸ்தீபு செய்து வருகின்றது.

இது தொடர்பாக ஒரு வார கால அவகாசம்விதித்து அச்சங்கம் அரசாங்கத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

தபால் ஊழியர்கள்வேலை நிறுத்தம் மேற்கொண்ட சமயம் இடமாற்றம் செய்யப்பட்ட 10 ஊழியர்களின் இடமாற்றத்தை ரத்துச்செய்யவும்—

வேலை நீக்கம் செய்யப்பட்ட இரு ஊழியர்களை மீண்டும் சேவையில் இணைக்கவும்—பிரதி தபால், தொலைத்தொடர்பு அமைச்சர் இணங்கியிருந்தார்.

ஆனால் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இப்படி சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (இ-[illegible])

## மாகாணசபைத் தேர்தல்:

## ஐ. தே. க. சார்பில் தமிழரும் போட்டி!

கொழும்பு, ஜூன் 8

தெற்கில் நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தல்களில் ஐ. தே. க. சார்பில் பல தமிழர்கள் போட்டியிட விருக்கின்றனர்.

சட்டத்தரணி ஒருவரும், வர்த்தகர் ஒருவரும், யாழ். மாவட்டத்தில் ஐ. தே. கவின் அமைப்பாளராக இருந்த ஒருவரும், தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றின் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவு அதிகாரி ஒருவரும் ஐ. தே. க. சார்பில் போட்டியிட விருக்கும் தமிழர்களாவர்.

இதேபோன்று பொது மக்கள் ஐக்கிய முன்னணியும் தனது சார்பில் தமிழர்களை நிறுத்த ஆள்களைத் தேடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் கொழும்பு மேயர

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவாசாரியர்களுக்கு

கடந்த ஈஸ்வர வருடத்தில் சிவாசாரியர்களாகத் தீட்சை பெற்றுக்கொண்ட அந்தணர்கள் தங்கள் பெயர், முகவரி, தீட்சை விவரங்களை, 98-06-20 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக
விளம்பர இல: 744

**மே / பா 'உதயன்'**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்
[சி – 3967]

## BARATHY

**சித்தன்கேணி.**

## O/L DAY CLASS

**பிரிவு 2 ஆரம்பம்: 09-06-1998**
செவ்வாய் காலை 8-00 மணி

எமது தனித்துவமான ஆசிரியர் குழுவினால்

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. தேவா |
| கணிதம் | — | திரு. எஸ். சிவரூபன் |
| | — | திரு. நடா |
| தமிழ் | — | திரு. சின்னத்தம்பி |
| சமூகக்கல்வி | — | திரு. கே. எஸ். முத்துலிங்கம் |
| ஆங்கிலம் | — | திரு. வாகீசர் |
| வர்த்தகம் | — | திரு. லோகேஸ்வரன |
| சமயம் | — | திரு. கோபி |

மாலை நேரம் ஆண்டு 5 முதல் 11 வரை
புதிய பிரிவுகள் நடைபெறுகின்றன.

குறிப்பு; மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் சித்தன்கேணியில் எமது நிறுவனம் தவிர்ந்த வேறு எந்த கல்வி நிறுவனத்திலும் கற்பிக்க மாட்டார்கள்.

(56703)

## வாரியருள் தந்திடும்
## வதனமதி பூத்த அன்னை சிவகாமி

கோலமயிலாடும் கோண்டாவில் பதியினிலே
கோயில் கொண்ட தில்லையம்பதி - சிவகாமி
நாடியுனை வருபவர்க்கு நல்லருள் அளித்திடும்
நாயகன் அன்னையே - சிவகாமி
வைகாசி மாதந்தனில் வடம்பிடித்து நாமிழுக்க
வாரியருள் தந்திடும் வதனமதி பூத்த அன்னை
– சிவகாமி

காவடிகள் ஆடிவர
கற்பூரச்சட்டியேந்திய கன்னியர் கூட்டம்வர,
நாதஸ்வர மேள ஒலி நாத இசை ஒலித்துவர,
அரோகரா அரோகரா என அலையலையாய்
அடியார் கூட்டம்வர,
அன்னை சிவகாமியின் தேர் அசைந்து அசைந்துவர,
சிந்தை உருகச் சிவகாமி புகழ்பாடும் சிற்றடியார்
கூட்டம் சித்திரத்தேரின் பினனே சிவாயநம பாடிவர,
திக்கெட்டும் போற்றும் தில்லையம்பலத்தானுடன்
திருநடனம் புரியும் தில்லையம்பதி – சிவகாமி
இலங்கைத் தீவில் வந்துதித்த இனியவளே
ஈசனின் இடப்பாகம் கொண்ட ஈஸ்வரியே - சிவகாமி
தலைமேல் கைகுவித்துத் தாயே உமைவேண்ட
தந்திடுவீர் வரம் எமக்கு தாட்சாயணி – சிவகாமி.

குமாரசுவாமி உதயரூபன் (K.H.C)
கோண்டாவில் வடக்கு.

சி. சிவலிங்கம்
செயலாளர்.

(56702)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 29 – 01 – 1940



உதிர்வு: 09 – 05 – 1998

அமரர் **பட்டக்கண்ணு**
**கதிரவேலு பஞ்சலிங்கம்**

09 — 05 — 1998 இல் எம்மைவிட்டுப் பிரிந்தஎம் அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (08 — 06 — 1998) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

645, (1199), கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (56705)

## எரிபொருள் விலை குறைக்கக் கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் எரிபொருள்களின் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் வடமாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் என். ஏ. ஒபடகேயிடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

கப்பல்மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்படும் எரிபொருள்கள் கொழும்பு விலையிலும் அதிகமாகவே இங்கு விற்கப்படுகின்றன.

இதனைச் சுட்டிக்காட்டி ஏற்கனவேயும் இது தொடர்பான கடிதம் ஒன்று புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ–71)

## ஆயுள்வேத நிலையம் திறப்பு

நெடுந்தீவு மத்தியில் புதிதாக அமைக்கப்பட்ட ஆயுள் வேத வைத்திய நிலையத்தை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் இன்று திங்கட்கிழமைதிறந்து வைப்பார்.

நெடுந்தீவு ஆயுள்வேத வைத்திய சங்கம் மேற்படி வைத்தியசாலையை ஆரம்பித்துள்ளது. (ஐ-111)


## யூனிவேர்சல்

கந்தர்மடம்.

A/L 2000
**கணக்கியல்**
திரு தவா
ஆரம்பம்:- 08 – 06 – 98
Mon. 3-00 p.m.
(560701)

## நாகம்ஸ்

**சினிமா**
சுன்னாகம்.
08-06-98 திங்கள்
அகல வெண் திரையில்
விஜய் - சுவாதி
ரகுவரன் நடித்த
**செல்வா**
காட்சிகள்:- 10-30, 2–30
(56704)

யாழ்.
## ரீகல்
வெண் திரையில்
(25 அடி அகலத் திரையில்)
இன்று முதல் 10-30—2-30
அருண்குமார், மந்திரா, பிரகாஷ்ராஜ், வடிவேல் நடித்த
**பிரியம்**
பயமுறுத்தல்களுக்கு அடிபணியாது இணைபிரியாத காதல் ஜோடியின் நெஞ்சை உருக்கும் காட்சிகள்.
தினசரி 5-00 மணிக்கு
JACKIE CHAN நடித்த
**DRAGON - FIST**
கராட்டி சித்திரம்.
(56618)

**மாதாந்த பயிற்சிப் பரீட்சை**
நாளை நடைபெறாது.
31வது புலமைப்பரிசில்
பயிற்சிப் பரீட்சை
நாளை நடைபெறும்.
BOND – யாழ் நகர்.
(56700)


## தான்தோன்றீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம்

மட்டக்களப்பு, ஜூன் 8

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது.

மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 1 இலட்சத்திற்கும் மேலான மக்கள் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் இந்த ஆலயம் அமைந்துள்ளது.

தரைவழி, வாவி வழிப் போக்குவரத்துச் சோதனைச் சாவடிகளில் பாதுகாப்புப் படையினரது சோதனைகள் சிறிது தளர்த்தப்பட்டிருந்தன. (இ-21)

## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்
**திரு. ஜே. எக்ஸ். செல்வநாயகம்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**சவிரிமுத்து ஜோசேப்**

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்.
**வேலணை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்,**
**வேலணை.**

(56678)

## மரண அறிவித்தல்கள்

### மார்க்கண்டு சண்முகநாதன்

(முன்னாள் V. M. S முகாமையாளர்)

காரைநகர் மாப்பாண ஊரியைப் பிறப்பிடமாகவும் இல:- 40 கடைச்சாமியார் வீதி, நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சண்முகநாதன் 07 – 06 – 98 ஞாயிறு மாலை 5.00 மணியளவில் காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா மார்க்கண்டு (சிவன் கோவிலடி), பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் (மிருதங்க வித்துவான் R. V.) மற்றும் சௌந்தராம்பிகையின் அன்பு மருமகனும், மங்களாம்பாளின் அன்புக் கணவரும், கிருபாலினி, கோகுலதாசன், அபிராமி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவபாத சுந்தரம், ஜெகதீஸ்வரன் மற்றும் நடராசா, இராஜேஸ்வரி, சடாசிவம (கனடா), நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், உலகநாதன் (நாதன் ஸ்ரோர்ஸ், பசறை), மிதுனராணி, தீபசோதி, பாலராணி, இந்திராதேவி, சௌந்தராம்பாள், மங்களாம்பாள், சுந்தராம்பாள், சந்தானலட்சுமி, திருவருள் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (08 – 06 – 98) 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி

இல. 40, கடைச்சாமி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம். (56708)

### சண்முகம் பொன்னம்பலம்

(D. L. O)

காரைநகரைச் சேர்ந்த சண்முகம் பொன்னம்பலம் 07 — 06 — 1998 நேற்று திருகோணமலையில் காலமானார்.

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் காரைநகர் களபூமியை வசிப்பிடமாகவும் தற்போது திருகோணமலையில் வசித்தவருமாகிய சண்முகம் பொன்னம்பலம் (D. L. O) காலமானார்.

இவர் சண்முகம் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், முருகேசு தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் கணவரும், காலஞ்சென்ற அம்பலவாணர் (இளைப்பாறிய தபாலதிபர்), அன்னம்மா, காமாட்சி (லண்டன்) ஆகியோரின் சகோதரரும், சுந்தரமூர்த்தி (கனடா), சுந்தரலிங்கம் (மாநகர சபை, யாழ்ப்பாணம்), சுந்தரசிவம் (இலங்கை வங்கி, கொளுப்பிட்டி), ஆரா அமுதன் (லண்டன்), புவனேஸ்வரி (ஆசிரியை, புனித மரியாள் வித்தியாலயம், யாழ்ப்பாணம்), ஆனந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சிவனேஸ்வரி (கனடா), யோகேஸ்வரி, மதிவதனி (இலங்கை வங்கி, தலைமையகம், கொழும்பு), லலிதாம்பிகை (லண்டன்), சிவஞானசுந்தரம்பிள்ளை (மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), திலகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருகோணமலை இந்து மயானத்தில் இன்று பிற்பகல் 3. 00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பொ. சுந்தரலிங்கம்
(மகன்)

நாமகள் ஒழுங்கை,
பொற்பதி றோட்,
கொக்குவில். (56706)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எல்லை நெருக்கடி தீவிரமடைகிறது


# எதியோப்பிய விமானங்கள் எரித்திரியா மீது குண்டுவீச்சு!

அஸ்மாரா, (றோய்ட்டர்)

கிழக்கு ஆபிரிக்க நாடான எதியோப்பியாவுக்கும் அதன் முன்னாள் மாநிலமும் தற்போது தனிநாடாக உள்ளதுமான எரித்திரியாவுக்கும் இடையிலான சர்ச்சைக்குரிய எல்லை நெருக்கடி தீவிரமடைந்திருக்கிறது.

எரித்திரியத் தலைநகர்அஸ்மாராவில் உள்ள இராணுவ சிவில் விமான நிலையம் மீது எதியோப்பிய விமானங்கள் குண்டுத்தாக்குதல் நடத்தி வருகின்றன.

கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களிலும் எதியோப்பியாவின் 'மிக் – 23' (MIG --23) ஜெற் விமானங்கள் இரு தடவைகள் அஸ்மாரா விமானத்தளம் மீது குண்டுகளை வீசின.



குண்டு வீச்சினால் அஸ்மாரா விமான நிலையத்தில் இருந்து மேல் எழும் புகை மண்டலம்

முதலாவது தாக்குதலில் சிவிலியன் ஒருவர் உயிரிழந்தார்; நால்வர் காயமடைந்தனர். தாக்குதல் நடத்திய 'மிக்—23' ரக விமானங்களில் ஒன்றை எரித்திரியர்கள் விமான எதிர்ப்புத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினர். விமானம் வீழ்த்தப்பட்ட செய்தி பரவியதும் அதனைப் பார்ப்பதற்காக எரித்திரியர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் விமான நிலையப் பகுதியை நோக்கி விரைந்தனர்.

இதற்கு முன்னராக எரித்திரிய விமானங்கள் எதியோப்பியாவின் வடபகுதி நகர் ஒன்றைத் தாக்கியபோது 40 எதியோப்பியர்கள் வரை உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

அஸ்மாரா மீதான் இரண்டாவது தாக்குதல் சனிக்கிழமை பிற்பகல் நடந்தது. இவ்விரு தாக்குதல்களின் போதும் எதியோப்பிய விமானங்கள் இரண்டை தாம் சுட்டு வீழ்த்திவிட்டதாக எரித்திரிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

எரித்திரியாவுக்கும், எதியோப்பியாவுக்கும் இடையிலான நீண்ட— சர்ச்சைக்குரிய—எல்லைப்பகுதியில் இரு நாட்டுப் படைகளும் தொடர்ந்து முறுகல் நிலையில் இருந்துவந்தன. அடிக்கடி மோதல்களும் இடம்பெற்று வந்தன.

இந்த எல்லை நெருக்கடிக்குத் தீர்வுகாண அமெரிக்கா மற்றும் றுவாண்டா ஆகியன இணைந்து தயாரித்த நான்கு அம்ச சமாதானத் திட்டத்தை இருதரப்பும் நிராகரித்தை அடுத்தே தற்போது நிலைமை மோசமாகியுள்ளது.

நிதானமாகவும், கட்டுக் கோப்புடனும் நடந்து கொள்ளுமாறு இரு நாடுகளையும் அமெரிக்காவும், ஐ.நா. சபையும் கேட்டுள்ளன. தற்போதைய மோதல் நிலை தொடர்ந்து நீடிக்குமானால் இரு நாடுகளுக்கும் இடையே பெரும்போர் வெடிக்கும் ஆபத்து இருப்பதாக அவதானிகள் எச்சரித்துள்ளனர்.

சர்ச்சைக்குரிய எல்லைப் பகுதியில் 400 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்துக்கு இருதரப்புமே உரிமை கொண்டாடி வருகின்றன. இந்த வலயத்தில் இரு நாட்டு படையினரும் ஊடுருவி வருவதால் அடிக்கடி மோதல்கள் நடைபெறுகின்றன.

எதியோப்பியாவின் ஒரு மாநிலமாக இருந்த எரித்திரியா நீண்ட பிரிவினைப் போராட்டத்தின் பின் 1993இல் தனி நாடாகப் பிரிந்தது. (ஐ)

## வெளிநாட்டவர் வெளியேற்றம்

அஸ்மாரா, ஜூன் 8

அஸ்மாரா நகர விமான நிலையம் மீது எதியோப்பிய விமானங்கள் தாக்குதல் நடத்தியதை அடுத்து அந்த நகரில் தங்கியுள்ள வெளிநாட்டுப் பிரஜைகள் பலர் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

அத்தியாவசிய கடமை புரிவோர் தவிர்ந்த அமெரிக்கத் தூதரகத்தின் ஏனைய பணி

உலக அரங்கில்

யாளர்கள் மற்றும் அமெரிக்கர்களை அங்கிருந்து வெளியேறுமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அமெரிக்கா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 129 பயணிகள் விமான மூலம் ஜேர்மனி போய்ச் சேர்ந்துள்ளனர்.

அவசர மீட்புப் பணியில் ஈடுபட சில ஐரோப்பிய நாடுகள் தமது விமானங்களைத் தயார் நிலையில் வைத்துள்ளன. (ஐ)



ஓர் அமெரிக்கத் தந்தை தனது இரு புதல்விகளுடன் எரித்திரியாவில் இருந்து வெளியேறி ஜேர்மனின் பிராங்பேட் விமான நிலையத்தை வந்தடைகிறார். (ஐ)

(படம்: றோய்ட்டர்)


## தேவை

கைதடி கொல்களத்தில் இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகள், ஆடுகளைப் பரிசோதனை செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றக் கூடிய ஒய்வுபெற்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தேவை. கொடிகாமத்தில் உள்ள சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்.
சாவகச்சேரி பிரதேச சபை.

(சி/3964)



## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரும், எமது சங்கத்தின் செயலாளருமாகிய

திரு. J. X. செல்வநாயகம்

அவர்களின் அன்புத் தந்தையார்

**சவிரிமுத்து ஜோசேப்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தாருக்கும், உறவினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/சேர். வைத்திலிங்கம்
துரைசுவாமி ம. ம. வி.,
. வேலணை.

(56698)


## ரயிலில் குண்டு வெடிப்பு

இஸ்லாமாபாத் ஜூன்8

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் நேற்றுக் காலை ஓடிக்கொண்டிருந்த ரயில் ஒன்றில் சக்தி மிக்க குண்டு வெடித்ததில் 20.க்கும் மேற்பட்ட பயணிகள் பலியாகினர்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. [ஐ]


## DCS JAFFNA

Courses in MS Word and MS Excel are Scheduled to begin on 15th June 1998. Classes will be held on Weekdays after 4.30 p.m. for the convenience of Office employees.

Those interested Should Contact the Undersigned for further details.

Director (Ad)

DCS
124/2, Palaly Road,
Thirunelvely,
P. O. BOX 144,
Jaffna.

(56674)



## ஜி. ரி. கொமினிக்கேஷன்

[யாழ். பல்கலைக்கழகம் அண்மையில்]

மங்களகரமான திறப்புவிழா

இன்று காலை 11 மணிக்கு இராமநாதன் வீதி திருநெல்வேலியில் ஜி. ரி. கொமினிக்கேஷன் திறந்து வைக்கப்படுகிறது.

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

T. P. NO—2061.

34, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

(56666)



## M. Sc. IN Biotechnology 1998

Graduate (and those awaiting results) in Chemical, Biological, Medical, Dental, Veterinary, Agricultural and Engineering Sciences will be considered. Forward application with biodata. All applicants will be required to sit for a qualifying examination and a viva. Address correspondence to the Registrar, University of Jaffna.

Closing date: 1998 - 07 - 15

REGISTRAR
UNIVERSITY
OF JAFFNA

University of Jaffna,
Sri Lanka.
1998 - [illegible] - 03

(C/3952)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும், சமூகசேவையாளருமான

**சி. நமசிவாயம்** ஜே. பி.

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் பிரிவால் ஆறாத்துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமதுஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்

(56685)



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி சக மாணவர்கள்
பிரபாகரன், சிவானந்தராஜா
ஆகியோரின் பாசமிகு தந்தை

சின்னத்தம்பி நமசிவாயம் (J.P)

அவர்களின் திடீர் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

A/L 1996 ஆம் ஆண்டு வர்த்தகபிரிவு மாணவர்கள்.
யாழ்/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

(56694)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத்துறை மேற்கு
# ஸ்ரீ வதிரிபீட மன்றுளாடும் பெருமான்
# விநாயகர் தேர்த் திருவிழா சிறப்புமலர்

08 - 06 - 1998

## 375 வருடப் பழைமை கொண்ட சிறப்புறு ஆலயம்

சைவமும் தமிழும் புண்ணிய சீலமும் சிறப்புற விளங்கும் கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ வதிரி பீட புண்ணிய ஷேத்திரத்தில் அமர்ந்திருந்து அருள்பாலிக்கும் எம் பெருமான் ஸ்ரீ மன்றுளாடும் விநாயகருக்கு வைகாசிமாதம் 17 ஆம் நாள் கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகியது. இன்று பஞ்சமுக விநாயகர் தேரிலே ஆரோகணித்து மக்களுக்குக் காட்சி அளிக்கவிருக்கிறார்.

எமது ஆலயம் 1623 ஆம் ஆண்டளவில் அமைக்கப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. அத்துடன் இவ் விநாயகர் வேதாரணியத்தில் இருந்து இங்கே கொண்டு வந்து தாபிக்கப்பட்டதற்குமான சான்றுகளும் உள்ளன.

இவ்வாலயத்தில் இன்றைக்கு முன்னூற்றைம்பது வருடங்களுக்கு முன்பதாக நல்லூர் அரசகுமாரன் எதிர்மன்னசிங்கனை போர்த்துக்கேயர் இக்கோயிலில் வைத்துச் சிரச்சேதம் செய்தனரென்றும் அச்சமயம் இக்கோயில் குருக்களும் வாளேந்திப் போரிட்டு தானும் சிவபதம் அடைந்தார் என்றும் செய்தி உண்டு.

இடப்பெயர்வின் பின்னர் இங்கே வந்து 1997 ஆவணிமாதம் 18ஆம்திகதியன்று ஆலயத்தில் அந்தரீதப்பிரதிட்டாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அத்தோடு நடராசப் பெருமானுக்கு ஓர் அழகிய சிலையை அமைத்து கார்த்திகை மாதம் 23 ஆம் நாள் கும்பாபிஷேகமும் செய்வித்துள்ளோம்.

இன்னும் பல திருப்பணி வேலைகள் உள்ளன. அவற்றைச் செவ்வனே வரும் மகோற்சவத்திற்கு முன்னதாக செய்து முடிப்பதற்கு எல்லாம் வல்ல விநாயகரை வேண்டி நிற்போமாக.

க. செந்தில்குமரன்
ஆலய பரிபாலனசபைத் தலைவர்



## கொழும்புத்துறை விநாயகரே!

வதிரிபீட பதியினிலே கோயில் கொண்ட
விநாயகரே
கொடுமைகள் களைந்தெமக்கு
அருள் புரிவாய் கணபதியே
வெற்றிகள் வந்து சேர வேதனைகள்
அகன்று ஓ -
நற்றுணையாய் எமக்கு ஆறுதல்தந்திடுவாய்

சமூக ஜோதிகா. கணேசதாசன்

## பிரதம குரு அருளாசி

எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருளால் இன்று பஞ்சமுக விநாயகர் தேரில் ஆரோகணித்து மக்களுக்கு அருட்காட்சி கொடுத்தருள இருக்கிறார். இத்தருணம் அடியார்களுக்கு எல்லாம் வல்ல விநாயகர் அருளால் சகல செளபாக்கியங்களும் கிடைக்கப் பெறவும், அமைதி, சமாதானம் நிலவவும் பிரார்த்திக்கின்றேன்.

சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக் குருக்கள்
(மகோற்சவ பிரதம குரு)

## மனமுவந்து ஒத்துழைப்பு

சைவமும், தமிழும் புண்ணிய சீலமும் சிறப்புற விளங்கும் எம்பெருமான் இன்று தேரில் ஆரோகணித்து வலம் வருவது பெரும் அருட்காட்சியாகும். எமது ஆலயம் சிறப்புற்று விளங்கவும், ஆலயத்தின் திருப்பணி வேலைகளை சிறப்புற மேற்கொள்ளவும் இவ்வூர் மக்கள் அனைவரும் மனமுவந்து ஒத்துழைக்க வேண்டும். எம்பெருமானும் அதற்கு உதவ வேண்டும் என விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

இ. பரராஜசிங்கம்
(உபதலைவர், ஆலய பரிபாலனசபை.)

ஆலயத்திற்கு அன்பளிப்புச் செய்தோர்:
**திரு. சி. திருநாவுக்கரசு**
(சகடை)
டாக்டர்
**ப. விக்கினேஸ்வரன்**
[சப்பறம்]

மலர் அமைப்பு: பா. நந்தகுமார்

**E. S. பேரம்பலம்**
50 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**மகாலக்ஷ்மி ஸ்ரோர்ஸ்**
212. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ்**
298, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,

**மகாராணி பட்டுச்சோலை**
50, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்

**குமரன் ஸ்ரோர்ஸ்**
ஈச்சமோட்டை வீதி,
ஈச்சமோட்டை.

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**
119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## நன்றிகளும் வாழ்த்துக்களும்

ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியம் என்ற கருத்திற்கமைய யா/ சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை மாணவர்களது கல்வி அபிவிருத்திக்காக ஒன்பது பரப்பு நிலத்தை அன்பளிப்பாகத் தந்துதவிய

திருமதி இராஜ இராஜேஸ்வரி வேலாயுதர்
அவர்களுக்கும் அவர்களது மகள்
**திருமதி திலகவதி சேனாதிராஜா**
அவர்களுக்கும் எமது நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்க
உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க
உறுப்பினர்கள்.

(56621)

## RUBALAYA BEAUTY PALAR

★ DRESSING OF BRIDES
★ BRIDAL BOUQUETS
★ HAIR DRESSING AND
★ BEAUTY CULTURE & ( ORDERS UNDERTAKEN )

மனைப் பொருளியல் வகுப்புக்கு
புதிதாகச் சேர விரும்புவோருக்கு
SPOKEN SINHALA இலவசம்.

பதிவுக்குத் தொடர்பு கொள்ள வேண்டியது:
8, 9, 10 ஆம் திகதி 3. 30 -- 5.30 மணிவரை

CONDUCTED BY: Mrs S.GNANAGOBAL,
178, BROWN ROAD,
JAFFNA.

(56680)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு ஞாபகார்த்த பரிசில்கள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பருத்தித்துறை இராமகிருஷ்ண சேவாச்சிரமசுவாமி சித்ரூபானந்தா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வசதி குறைந்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை அன்பளிப்புச் செய்வார். (ஐ-6)

## சமூகவிஞ்ஞான கலந்துரையாடல்

சுன்னாகம், ஜூன் 8

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் நடத்தும் மாதாந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாயன்று காலை 9 மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது.

ஏ. ஜே. கனகரட்ணா தலைமையில் நடைபெறும் இக் கலத்துரையாடலில் 'தெற்காசிய அரசியலின் அண்மைக்காலப் போக்கு' என்ற தலைப்பில் ஏ. எஸ். உதயகுமார் உரையாற்றுவார்.

சமூக விஞ்ஞான, அறிவியல், பண்பாட்டு ஆர்வலர்கள் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-27)

## சிறுவர் பாடசாலைகள் இயங்கவில்லை

செம்பியன்பற்று ஜூன்8

வடமராட்சிகிழக்கு மாமுனைப் பகுதியில் சிறுவர் பாடசாலை எதுவும் செயற்படாததால் இப்பகுதியில் உள்ள சிறுவர்கள் கல்வி கற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ—36)

இணுவில் கந்தசுவாமி கோயில்
## திரு மஞ்சத் திருவிழா விஞ்ஞாபனம்

மங்களகரமான வெகுதானிய வருஷம் வைகாசி 27 ஆம் நாள் (10 - 06 - 1998) புதன் கிழமை காலை 9-00 மணிக்கு ஆறுமுகப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று மாலை 4-30 மணிக்கு ஆறுமுகப் பெருமான் சரித்திரப் பிரசித்தி பெற்ற திரு மஞ்சத்தில் எழுந்தருளி திரு வீதியுலா வரும் அருட்காட்சியை அடியார்கள் அனைவரும் கண்டு தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

— தேவஸ்தானம்

(56695)

## அந்தண மாணவர்கட்கு

1997 மார்கழி மாதம் நடைபெற்ற க. பொ.த. (சா / தர) பரீட்சையில் சித்தியடைந்த அந்தண மாணவர்கள் தங்கள் பெயர், முகவரி. பெற்ற சித்தியின் விவரங்கள் ஆகியவற்றை 98 - 06 - 20ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக

விளம்பர இல: '743'

மே / பா 'உதயன்'
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

[சி/3966]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி

**விண்ணப்பம் கோரல்**

1998 ஜூலை மாதம் 1 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் ''கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பிரிவு'' பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தினை 10ரூபா செலுத்தி கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம்.

- அதிபர்

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி,
இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்,

(சி–3947)


## அங்கீகாரம் பெற்ற கட்சிகளில் புலிகளின் கட்சியும்

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசியல்கட்சிகளில் விடுதலைப் புலிகளின் அரசியல் கட்சியாக முன்னர் பதிவு செய்யப்பட்ட மக்கள் முன்னணியும் அடங்குவதாகத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் செயலாளராக யோகரட்ணம் யோகியின் பெயர் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ–21)

## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர்
C.X. செல்வநாயகம்
அவர்களின் தந்தையார்

**சவிரிமுத்து யோசேப்**

அவர்களுக்கு எமது கண்ணீர்அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவரின் குடும்பத்தாருக்கு எமது அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மருத்துவர் ஆறுமுகம் தியாகராஜா
அனலைதீவு மக்கள் சார்பாக

(56644)

# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

## ஐந்தாண்டு



**அமரர்**
**சின்னப்பொடி தர்மலிங்கம்**
(புறோக்கர் தறுமு)

மண்ணில் 28-03-1944
விண்ணில் 18-08-1993

அன்பின் திருவுருவாய்
அமைதியின் உறைவிடமாய்
பாசத்தின் பரம் பொருளாய்
வாழ்வின் வழிகாட்டியாய்
குடும்பத்தின் கோபுரமாய்
கோபுரத்தின் ஒளிவிளக்காய்
எமைக்காத்த தெய்வமே...!
ஈந்துவக்கும் இன்பமதை
இயல்பாகக் கொண்டவரே !
மின்னல் போல் மறைந்தீரே - ஐந்து
ஆண்டுகள் சென்றாலும் மாறாது
மறையாது ஒளிவீசும்
உங்கள் திருமுகம் !

## ஓராண்டு



**செல்வி தர்மலிங்கம் சைமினி**
(யா/ பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு மாணவி)

அன்னை அரவணைப்பில் 22-12-1975
அநியாய அழிப்பில் 21-05-1997

பூக்கள் உதிர்வது பூமியின் காலடியில்
பூவே நீ உதிர்ந்தாய் இறைவனின் காலடியில்
வாடிய மலர்கள் வீழ்வது இயற்கையில்
வாடாமலரே! நீ வீழ்ந்தாய் செயற்கையில்
விளையாட்டில் வீராங்கனையே — இசையின் கலைமகளே!
சுருக்கெழுத்தில் திறமைசாலியே — எதிர்காலப்பட்டதாரியே
பரீட்சை முடிவுகளும் நேர்முக அழைப்புகளும் தினந்தினம்
உன்பெயரில் நம்வீட்டுமுகவரியில் தேடி வருகின்றன — நீயோ
உன் முகவரி கூறாது எங்கு சென்றாய்?
இறைவா... நீதி எங்கே? நியாயம் எங்கே? உனை
எழுப்புவதற்கு வழிதான் எங்கே?
உண்மைகள் புதை குழியில்
போலிகள் பூமி மீதினில்
ஓராண்டு சென்றதம்மா
ஓயாது உன் நினைவம்மா!
வஞ்சனை தெரியாதவள் நீயம்மா — ஆனால்
வஞ்சித்து விட்டனர் உனையம்மா
பூத்த கொடி தவிக்கின்றது!
சகோதரப் பறவைகள் துடிக்கின்றன
வெந்த புண்ணில் வேலும் பாய்கின்றதே
விடிவு காலமே... உன் வரவு வேண்டுமே!

என்றும் மறக்கமுடியாத பாச நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி. - குடும்பத்தினர்

(56623)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் உங்களது வரலாறு, வரலாற்றை மறக்கலாமா? 300 நாடகங்களும் 50 சிறுகதைகளும் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை வீரகேசரியில எழுதிய கட்டுரைகள் ரூபா 50. [56247]

### தேவை

அச்சகம் ஒன்றை நடத்துவதற்கு மெஷின், கட்டர் என்பன தேவை. தொடர்புகட்கு: நியூ டீசன்ஸ் ரெயிலேர்ஸ், மகாவித்தியாலய வீதி, நெல்லியடி. [56676]

### வகுப்புக்கள்

தமிழ், ஆங்கில தட்டெழுத்து வகுப்புகள் 10 – 06 – 98 அன்று புதன் கிழமை ஆரம்பம், சாயி, 116, பலாலி வீதி, (கராச் அருகில்) கந்தர்மடம், யாழ்ப்பாணம். [56688]

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள ஓடுகள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: திருச்செல்வநாதன் (உமா), உடையார் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். [56673]

வீட்டுத் தளபாடங்கள், பாவனைப் பொருள்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகட்கு: 09-06-98 காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை. புதிய இல. 653, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [56697]

### வாடகைக்கு

பாட்ஸ் கடை தளபாடங்களுடன் வாடகைக்கு விடப்படும். தொடர்பு: இல 38₂C, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [56672]

## 4 ஆம் தடவை பாம்பினால் கடியுண்டவர்

தென்மராட்சி, ஜூன் 8

சடந்த எட்டுமாத காலத்தில் நான்சாவது தடவையாக பாம்பினால் கடியுண்ட இளைஞன் ஒருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படிப்பதற்காக அதிகாலை எழுந்து கதவைத் திறந்த போது கதவில் தொங்கிக் கொண்டிருந்த பாம்பு இளைஞரின் கழுத்தில் கடித்தது.

கடந்தவெள்ளியன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்த பாலச்சந்திரன் பிரபாகரன் (வயது 20) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார்.

(இ-117)

## ஆத்மஜோதி முத்தையா ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், ஜூன் 8

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் 80ஆவது பிறந்ததின ஜெயந்தி விழா இன்று திங்கட்கிழமை வைகாசி விசாகத்தினத்தன்று தென்மராட்சிதிவ்விய ஜீவன சங்கத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத் தலைவர் வெ. கெ. தனபாலன் தலைமையில் நடைபெறும் இந்தநிகழ்வில் திருவாசக முற்றோதல், நினைவுரைகள் என்பன இடம் பெறும். (இ-ரி)

# அறிவித்தல்

கைதடி, மிருசுவில், கொடிகாமம் ஆகிய இடங்களில் உள்ள மாட்டிறைச்சிக் கடைகள் குத்தகை அடிப்படையிலோ அல்லது மாதாந்த கட்டண அடிப்படையிலோ இறைச்சி வியாபாரம் செய்வதற்காக கொடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே விரும்புவோர் 'சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்' என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

தலைவர்
சாவகச்சேரி பிரதேசசபை

(சி/3963)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

08 – 06 – 1998

தோற்றம் 1938 – 06 – 07



மறைவு 1998 – 05 – 09

### அமரர் சிவக்கொழுந்து அன்னலட்சுமி

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் இருப்பிடமாய் வாழ்ந்து எங்களை எல்லாம் நல்வழி காட்டி எம் நெஞ்சங்களில் நிறைந்து வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமதுமனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறும், எமது இல்லத்தில் இன்று (8-6-98) திங்கட்கிழமை நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு.

(56604)

## துவியாண்டின் துயர அலைகள்



அமரர்

### விசுவலிங்கம் தேவராசா

(வர்த்தகர்)

தரணியில் 15–05–1946

அவனியில் 13–06–1996

எங்கள் அன்புத் தெய்வமே! ஈராண்டென்ன ஈராயிரம் ஆண்டெனினும் மறக்குமோ எம்நெஞ்சம்; மாறுமோ எம்துயரம்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூரானை வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகள், உற்றார், உறவினர்.

டச்சுவீதி.
இருபாலை.

(56687)

### பயிலுநர் நுணுக்குக் காட்டியியலாளர் பயிற்சிக்கான

# விண்ணப்பம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்டத்தில் நிரந்தர வதிவிடமாகவுள்ள ஆண்/பெண் இரு சாராரிடமிருந்தும் கோரப்படுகிறது.

**தேவையான தகைமைகள்:-**

1) வயது:- 18 - 40

2) கல்வித்தகைமை:-

க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் தமிழ், கணிதம், விஞ்ஞானம் உட்பட இன்னும் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

தே. பொ. க. பரீட்சையில் தமிழ், கணிதம், விஞ்ஞானம் உட்பட இன்னும் ஒரு பாடத்திலும் 'பி' தரத்திற்கு குறையாத சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.


பயிற்சி முடிவின் பின் நிரந்தர/தற்காலிக நியமனம் எதுவும் வழங்கப்படமாட்டாது. எனினும் வேலைசெய்யப் பணிக்கும் நாள்களுக்கு நாட்சம்பள அடிப்படையில் 131 ரூபா வழங்கப்படும். விண்ணப்பங்களைப் போதிய விவரங்களுடன் தயாரித்து **19 - 06 - 98** - ற்கு முன் 'மாகாண பிரதிப் பணிப்பாளர், சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை, இல. 46, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும்.

வைத்திய கலாநிதி க. தா. சிவபாதம்,
பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

(சி/3951)

ஓம் முருகா
ஓம் விராட் விஸ்வப் பிரமணே நமக

## 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



### பாஸ்கரமூர்த்தி முரளிதரன்

(முரளி)

மொட்டெனத் தாயின் மடியில் 1968 – 11 – 05

பொட்டெனத் தமிழ் மண்ணில் 1998 – 05 – 11

எங்களுடன் கூடிப்பிறந்த எம் குலதெய்வமாகிய ஆருயிர் அண்ணா, மாதம் ஒன்று மறைந்தாலும் எமது அன்பு மாறாது அண்ணா. அன்பாய், பண்பாய், ஆதரவாய் எம்மை வளர்த்த அண்ணா, கலங்குது எமது கண்கலெல்லாம் குளமாய். அண்ணா ஒருநாளும் நாம் மறவோம். தாங்காத உள்ளமுடன் தவிக்கின்ற மனதுடன் துடிக்கின்ற நெஞ்சுடன் நினைத்து வாடுகின்றோம் அண்ணா!

எங்கள் குலவிளக்கின் இறுதிக்கிரியைகளில் கலந்தும், அனுதாபச்செய்திகள் அனுப்பியும், எமக்கு ஆறுதலளித்த அனைவருக்கும்நன்றிகூறும் இவ்வேளையில், **1998 — 06 — 08** ஆம் நாளான இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பித்துக் கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
தம்பி: கண்ணா,
சகோதரிகள், மைத்துனர்கள்,
உற்றார், உறவினர்கள்.

381, கஸ்தூரியர் வீதி,
யாழ்ப்பாணம்.

(56571)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## தொங்கும் கேள்விகள்

தென்னிலங்கையில் இப்போது அரசியலில் சூடாகி உள்ள விடயம் மாகாண சபைச் தேர்தல். மாகாணசபைத்தேர்தலை நடத்த வேண்டுமா அல்லது அதனைத் தவிர்த்து அரசாங்கத்தின் அதிகாரப் பரவல் திட்டத்தை முன்னெடுக்க வேண்டுமா என்பது குறித்து அரசியல் வட்டாரங்களில் விவாதமும் நடைபெற்று வருகிறது.

தெற்கில் இயங்கும் ஏழு மாகாண சபைகளில் ஐந்து சபைகளின் பதவிக் காலம் இந்த மாதத்தில் வெவ்வேறு திகதிகளில் முடிவடைகிறது.

ஆகையால் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதா இல்லையேல் ஒத்திப் போடுவதா என்பதனை இந்த வாரத்தில் முடிவு செய்யவேண்டிய அவசர தேவை அரசுக்கு.

ஆளுங்கட்சியைப் பொறுத்தவரையில், தேர்தல் நடத்தப்படும் என்ற நம்பிக்கையை உண்டாக்கும் வகையிலேயே அதன் நடவடிக்கைகள் வெளித்தோற்றத்துக்கு அமைந்துள்ளன.

ஆனால் உள்ளாந்தரமாக தேர்தலை நடத்த விரும்பவில்லை. மாகாண சபைகளைச் செல்லுபடியற்றன ஆக்கி தனது புதிய தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற முனைப்பே இதற்கு காரணம் என்பதல்ல.

இப்போது தேர்தலை நடத்தினால் சிங்கள மக்கள் மத்தியில் தமக்குள்ள ஆதரவு குறைந்துள்ளமை நிருபிக்கப்பட்டுவிடும் என்ற அச்சமே காரணம்.

மாகாணசபைத் தேர்தல்களை இப்போது நடத்துவது போரின் மத்தியில் இன்னொரு போரை ஆரம்பிப்பதனை ஒத்தது என்று சர்வோதயத்தலைவர் ஏ.ரி. ஆரியரத்தினா கூறியிருப்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

மாகாண சபைத்தேர்தல் நடத்தப்பட்டால் தெற்கில் அரசியல் வன்செயல்கள் பெரிய அளவில் தலையெடுக்கும் என்பதே ஆரியரத்னாவின் அச்சமாக உள்ளது. அதில் உண்மை இல்லாமல் இல்லை.

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவதைத் தமிழ்க் கட்சிகளும் ஆதரிக்கவில்லை. இரு கன்னைகளில் நின்று இரு வேறுபட்ட கருத்துக்களை முன்னிறுத்தியே தெற்கில் மாகாணசபைத் தேர்தலைத் தமிழ்க்கட்சிகள் விரும்பவில்லை.

ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தளவில் மாகாணசபைத் தேர்தலை நடத்தாது தட்டிக்கழிக்க விருப்பம் உண்டெனினும், தீர்வு யோசனையை முன்னெடுக்க முனையுமா என்பது கேள்விக்குரியதே.

போரில் வெற்றிகாணாமல் அதனை நிறுத்தி அரசியல் தீர்வை அரசு முன்னெடுக்குமா? அரசின் யோசனை குறித்து ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளுக்கு இடையேயான "பிய்ச்சுப்பிடுங்கல்கள்" தீர்ந்து வழி தெரியுமா? தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வு நடைமுறைவடிவம்பெறுமா என்பன பதில் கிடைக்காத கேள்விகளாகத் தொங்குகின்றன!

# குடாநாட்டில் மேலும் சில ஆலயங்களில் பலியிடும் வேள்விகளுக்கு ஏற்பாடு

வலி. தென்மேற்கு ஜூன் 8

கவுணாவத்தை வயிரவர் ஆலயத்தில் எதிர்வரும் 12 ஆம். 13 ஆம் திகதிகளில் மாபெரும் வேள்வி நடைபெறவுள்ளது.

குடாநாட்டின் மிகப்பெரிய பலியிடல் நிகழ்வு என வர்ணிக்கப்படும் இந்த வேள்வியில் நூறுக்கு மேற்பட்ட கடா ஆடுகளும், சேவல்களும் பலியிடப்படவுள்ளன.

இந்த வேள்வி யாகத்தைப் பார்வையிடவும், நேர்த்திக்கடன்களை நிறைவேற்றவும் குடாநாட்டின் பல இடங்களிலும் இருந்து பக்தர்கள் இந்த ஆலயத்தில் கூடவுள்ளனர்.

வேள்வி யாகத்துக்கான பூர்வாங்க பூசைகள் கடந்த வெள்ளியன்று விளக்கு வைத்தலுடன் ஆரம்பமாகியுள்ளன.

இதேவேளை—

நவாலி முத்துமாரிஅம்மன் ஆலயத்திலும் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆடுகள். கோழிகள் பலியிடும் விழா நடைபெற ஏற்பாடாகி வருகிறது.

பிரான்பற்று மாரியம்மன் ஆலயத்தில் கடந்த மாதம் 23 ஆம் திகதி நடந்த வேள்வியில் நூற்றுக்கணக்கான கடாக்களும், 40-க்கும் மேற்பட்ட சேவல்களும் பலியிடப்பட்டது தெரிந்ததே.

(ஐ-185)

## செம்பியன்பற்றில் சைக்கிள் திருட்டு

செம்பியன்பற்று ஜூன் 8

வடமராட்சி கிழக்குசெம்பியன்பற்று பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரித்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மாமுனைப் பகுதியில் திருடப்பட்ட சைக்கிள் செம்பியன்பற்றில் உள்ள ஒருவரின் வீட்டில் இருந்து மீட்கப்பட்டது.

இதேபோல் பளை தம்பகாமம் பகுதியில் இருந்து திருடப்பட்ட இரண்டு சைக்கிள்களும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பிரஸ்தாப நபரின் வீட்டில் இருந்து மீட்கப்பட்டன. அதன் பின் அந்தநபர்பொது மக்களால் எச்சரிக்கப்பட்டிருந்தார். (ஐ—36

# யுத்தத்தின் நடுவே தேர்தல்களை நடத்துவது பொருத்தமானதல்ல

## சர்வோதயத் தலைவர் கருத்து

கொழும்பு, ஜூன் 8

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது மாகாணசபைத் தேர்தல்களை நடத்த முற்படுவது யுத்தத்தின் மத்தியில் மற்றொரு யுத்தத்தை ஆரம்பிப்பது போன்றதே.

— சர்வோதய இயக்கத்தின் தலைவர் கலாநிதி ஏ.ரீ. ஆரியரத்னா இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நடைபெறும் போது தேர்தல் நடத்துவது பொருத்தமானதல்ல. அதற்காக மாகாணசபை முறையையோ அல்லது கிராம சபை, நகரசபை, நாடாளுமன்ற முறைமைகளையோ எதிர்க்கவில்லை. அவற்றை அங்கீகரிக்கிறேன் — என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை தொடர்ந்து பேணுவதை தான் எதிர்க்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

(ஐ.ரீ)

## சித்தன்கேணியில் நாணயத் தொலைபேசி

யாழ்ப்பாணம், ஜூன் 8

சித்தன்கேணி, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம் ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் வெளியிடங்களுடன் தொடர்பு கொள்வதற்கு வசதியாக ரெலிக்கொம் நிறுவனம் சித்தன்கேணியில் நாணயக்குற்றி மூலம் இயங்கும் தொலைபேசி ஒன்றை அமைத்துள்ளது.

வடபிராந்திய ரெலிக்கொம் நிறுவன முகாமையாளர் சி. கனகசூரியர் இந்த தொலைபேசிச்சேவையை நேற்று சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

(ஐ—6)

# ஆலயங்களுக்கு சிமெந்து வழங்கக் கோரிக்கை

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்களைப் புனரமைப்புச் செய்ய வேண்டியிருப்பதால் அதற்குத் தேவையான சிமெந்தை பெற்றுத்தர தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வன்முறைகளால் பெரும் எண்ணிக்கையான இந்து ஆலயங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றைப் புனரமைக்க சிமெந்து தருமாறு ஆலய அறங்காவற் சபைகள் கோரியபோதும் அக் கோரிக்கைகள் இன்னமும் கவனத்தில் எடுக்கப்படவில்லை எனவும்—

விண்ணப்பித்த அனைத்து ஆலயங்களுக்கும் உடன் சிமெந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் இந்துசமயப் பேரவை யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக் கோரிக்கை அடங்கிய கடிதத்தின் பிரதிகள் புனர்வாழ்வுப்பகுதிச் செயலாளர் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ஐ-103)

## விரைவில்

## சுன்னாகம், திருநெல்வேலியிலும் நாணயத் தொலைபேசிகள்

வடமராட்சி, ஜூன் 8

சுன்னாகம், சண்டிலிப்பாய், திருநெல்வேலி ஆகிய இடங்களில் நாணயக் குற்றி தொலைபேசிகள் விரைவில் அமைக்கப்படவுள்ளன.

ஏற்கனவே யாழ், நகரப் பகுதியிலும், மந்திகை, சாவகச்சேரி ஆகிய இடங்களிலும் நாணயக் குற்றித் தொலைபேசிகள் அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-173)

# வலி. தெற்கில் வசிக்கும் சகலருக்கும் ரூ. 5,000

## வழங்க நிதி ஒதுக்கீடு

சுன்னாகம், ஜூன் 8

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சகலருக்கும் மீளக்குடியமர்வு கொடுப்பனவு வழங்குவதற்கு, யாழ். அரச செயலகம் ஒதுக்கீடு செய்துள்ளது.

இப்பிரிவில் நிரந்தரமாகத் தங்கியுள்ள 2 ஆயிரத்து 586 பேருக்கும், தற்காலிகமாகத் தங்கியுள்ள 3 ஆயிரத்து 60 பேருக்கும் இக்கொடுப்பனவு கிடைக்குமெனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரதேச செயலர் பிரிவில் இதுவரை மீளக் குடியமர்ந்தோர், நிவாரணம் பெறாதோர் தமது பிரிவு கிராம சேவையாளருடன் தொடர்பு கொள்ளலாமென செயலக நிர்வாக உத்தியோகஸ்தர் எஸ்.ஜெயப்பிரகாசம் தெரிவித்தார்.

(ஐ-27)

# நவாலியில் சேதமடைந்த வீடுகளின் விவரம் பதிவு

வலி. தென்மேற்கு, ஜூன் 8

நவாலி வடக்கில் 'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையினால் பாதிப்படைந்த வீடுகளை சண்டிலிப்பாய் பிரதேச செயலக அதிகாரிகள் நேற்று முன்தினம் பார்வையிட்டனர்.

இந்த இராணுவ நடவடிக்கையினால் நவாலி வடக்கில் முன்னூறுக்கும் மேற்பட்ட வீடுகள் சிறுசேதம், பகுதிசேதம், முழுச்சேதம் என்ற வகையில் பாதிப்படைந்துள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேசச் செயலகத்தைச் சேர்ந்த கிராமிய அபிவிருத்தி உத்தியோகஸ்தர், ஜே-134 கிராம அலுவலர் அ. தனபாலரத்தினம் ஆகியோர் பார்வையிட்டு சேதங்களை மதிப்பீடு செய்தனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்திய அரசின் இலவச சிமெந்து வழங்கப்படவுள்ளது.

(ஐ-158)

### நாளை

வைகாசி - 26

செவ்வாய்க்கிழமை

திதி: சதுர்த்தசி
முற்பகல் 9.33 வரை

நட்சத்திரம்: அனுஷம்
மாலை 06.05 வரை.

பூரணை விரதம்

சுபநேரம் 10.52 -11.22

ராகுகாலம்: 05.52 - 06.22

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

இன்பத்தை இரட்டித்துத் துன்பத்தைப் பாதியாகக் குறைப்பது நட்பு.

ஃ பிரான்சிஸ்பேக்கன்

# ஆயுதப் போராட்டத்தின் முன்னோடி சிவகுமாரன்

## நினைவுக் கூட்டத்தில் உரை

தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை தனியொருவராக நின்று முன்னெடுத்தவர் தியாகி சிவகுமாரன். இன்று அவரது வழியைப் பின்பற்றி பல தியாகிகள் தோன்றுவதற்கு அன்றே வித்திட்டவர் அவர்.

தியாகி சிவகுமாரனின் நினைவுதினத்தை ஒட்டி உரும்பிராயில் உள்ள அவரது நினைவிடத்தில் கடந்த வெள்ளியன்று முற்பகல் நடைபெற்ற நினைவுக் கூட்டத்தில் உரையாற்றிய 'புளொட்' அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாநகரசபை உறுப்பினர் இருதயராஜன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

ஜூன் 5ஆந் திகதி தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் துயரம் நிறைந்தநாளாகும். தமிழ் பேசும் மக்களின் உரிமைக்கான போராட்டம் தமிழ் தேசிய இனத்தின் தந்தை அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் சாத்வீக ரீதியாக மேற்கொள்ளப்பட்ட போராட்டம் தோல்வியடைந்தமையினால் எதிர்காலச் சந்ததியினர் வேறு பாஷையில் தான் பேசுவார்கள், ஆயுதமேந்திய போராட்டத்தை முன்னெடுப்பார்கள் என அன்றே தெரிவித்தார். ஆனால் அதற்கான தலைமை ஏற்படுத்தப்படவில்லை. அக்கால கட்டத்தில் தியாகி சிவகுமாரன் அவர்கள் தனியொருவராக ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

ஆயுதப்போராட்டத்தின் அழுத்தம் தமிழர் உரிமைப் போராட்டத்தில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. தியாகி சிவகுமாரன் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த போதும் மனித நேயமுடையவராக தன்னைக் கைது செய்யவந்த பொலீசாரை நோக்கித் துப்பாக்கியை எடுத்த போது அந்த அதிகாரி 'நான் பிள்ளைகள் உள்ள குடும்பத்தவன் என்னைக் கொல்ல வேண்டாம்'' என்று கூற துப்பாக்கியை வீசி விட்டு தன்னைத்தானே அழித்துக் கொண்டார். அவரது நினைவு நாளில் தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய, தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை வென்றெடுப்பதற்காக ஐக்கியத்துடன்போராட உறுதி கொள்வோம்— என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தென்னிந்திய திருச்சபை

நற்செய்தி விழாவும், உதவிக்குரு அபிஷேகமும்

9 - 6 - 98 செவ்வாய் காலை 8.30 (S L.T.) மணிக்கு வட்டுக்கோட்டைப் பேராலயத்தில் ஆரம்பம்.

**K. ஐசக் குமரேசன்**
(அச்சுவேலி ஊழியன்)

**ஜெரம் போல்**
(ஆனைக்கோட்டை, காந்திஜி கிராம ஊழியன்)

ஆகியோர்

பேராயர் எஸ். ஜெபநேசனினால் உதவிக் குருக்களாக அபிஷேகம் செய்யப்படுவர்.

உங்கள் பிரசன்னத்தையும், பிரார்த்தனையையும் வேண்டுகின்றோம்.

வண. பி. ஜே. சூரியகுமார்,.
திரு. அ. ஜெயராசன்
அமைப்பாளர்கள்

வட்டுக்கோட்டை.

(C/3953)

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



தவப்பேறு
08 — 08 — 1932

சிவப்பேறு
24 — 05 — 1998

கொக்குவில் பிரம்படியைச் சேர்ந்த
அமரர்

**சுப்பையா ஆறுமுகராசா**
(பிரம்படி ஞானவைரவர் ஆலயப் பரிபாலகர்)

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து
மானிட வாழ்வை நீத்த— அத்தா
இனிக் காண்பது எங்கோ?
இத்தரணி உள்ளவரை மறக்காது நெஞ்சம்.

இன்று (8 - 6 - 98) திங்கட்கிழமை எமது இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இடம்பெறும். உற்றார், உறவினர், நண்பர்களை இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

திருமதி சரோஜினிதேவி ஆறுமுகராசா.
(அன்பு மனைவி)

பிரம்படி,
கொக்குவில்.

(சி/3965)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளைத் தலைமையகம்

# வதிரி தோற் பொருள் உற்பத்தித்திட்டம்
# வெற்றிடங்கள்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை மேற்படி திட்டத்தை நடத்துவதற்காக கீழ்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்றுவிப்பாளர் (ஒரு வருடத்திற்கு)**

தோற் பொருள் உற்பத்தியில் 10 வருட அனுபவத்திற்கு மேல் உள்ளவர்கள். வயது 40 — 50 இற்கு இடைப்பட்டவர் விண்ணப்பிக்கலாம்.

க. பொ. த (சா/த) சான்றிதழ் உள்ளவர்கள் மேலதிக தகைமை உடையவர்களாகக் கருதப்படுவர்.

**பயிற்சி பெறுநர் (6 மாத காலப் பயிற்சி)**

க. பொ. த சா/த கல்விச் சான்றுடன்
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
வயது 18 — 25 இற்கு இடைப்பட்டோர்.

தோற் பொருள் உற்பத்தியில் நாட்டமும், ஆரம்ப அறிவும் உள்ளவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**காவலர் (ஒரு வருடத்திற்கு)**

க. பொ. த (சா/த) கல்விச் சான்றுடன் அனுபவமுடையவர் விண்ணப்பிக்கலாம். இரவு / பகல் நேர கடமையாற்றல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 15 - 06 - 98 இற்கு முன்னதாக இ. செ. சி. ச. யாழ். கிளைத் தலைமையகம், 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். 20 - 06 - 98 முற்பகல் 10 மணிக்கு இ. செ. சி. ச. யாழ். கிளையில் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

கல்வித் தகைமைச் சான்றிதழ், தோற் பொருள் உற்பத்தித்தகமைச் சான்றிதழ், இரு நற்சாட்சிப் பத்திரங்கள், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை 20 - 06 - 98 காலை நடைபெறும் நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகளுக்கு தனியாக கடிதம் அனுப்பப்பட மாட்டாது.

கௌரவ செயலாளர்
இ. செ. சி. சங்கம், யாழ். கிளை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-3956)

# பரிசில் நாள் நிகழ்வு

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு ஞாபகார்த்த பரிசில் நாள் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி மகா வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பருத்தித்துறை இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் செயலாளர் சுவாமி சித்ரூபானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 17 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்படும். (இ-4)

# ஜே - 82 இல் மீளக்குடியமர்வு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். வண்ணார்பண்ணை (ஜே-82) கிராமசேவையாளர் பிரிவில் மீளக்குடியமர்வு நிதிக் கொடுப்பனவுக்காக விண்ணப்பித்தவர்களுள் 62 குடும்பங்களுக்கு ரூபா 5 ஆயிரம் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள குடும்பங்களில் பெயர், விவரங்களை அலுவலக நேரங்களில் பார்வையிடலாம் என்றும் உரியவர்கள் அலுவலகத்துக்கு வருகை தந்து படிவங்களில் ஒப்பமிடுமாறும் கிராம சேவையாளர் க. கணேசவேல் தெரிவித்துள்ளார். (இ-ரி)

# கோபுரத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்ப்பாணம், வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான கோபுர நிர்மாண அடிக்கல் நாட்டும் வைபவம் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை காலை 7.30 முதல் 8.15 வரையுள்ள சுபவேளையில் இடம் பெறவுள்ளது. (ஐ—8)

# பொது அறிவு போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 8

சுன்னாகம் இலங்கை வங்கியின் ஆதரவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இன்ரறக்ட் கழகம் நடத்தும் பொது அறிவுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

போட்டிகள் மருதனார் மடத்தில் இயங்கும் யூனியன் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகிய இரு நிலையங்களில் நடைபெறும் எனவும் போட்டியாளர்கள் தாம் விரும்பிய ஏதாவதொரு நிலையத்தில் போட்டிக்குத் தோற்றலாமெனவும் மேற்படி கழகச் செயலாளர் கே. பி அனுஷன் தெரிவித்துள்ளார். (ஐ-ரீ)

# கொழும்பில் வாந்திபேதி

கொழும்பு, ஜூன் 8

கொழும்பு, கம்பஹாமாவட்டங்களில் வாந்திபேதி நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த பத்து நாள்களுக்குள் கம்பஹா மாவட்டத்தில் 4 வாந்திபேதி நோயாளர்களும், கொழும்பு நகரத்தில் 2 வாந்திபேதி நோயாளர்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் எனவும்—

மேல் மாகாணப் பகுதியில் இந்த நோய் தொடர்ந்தும் பரவுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும்—

மேல்மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ... நிஹால் ஜெயத்திலக தெரிவித்துள்ளார். (இ-5)

# கண்ணீர் அஞ்சலி

05-06-98 இல் அகால மரணமடைந்த எமது நிறுவன இயக்குநர் சபை உறுப்பினர்

**சின்னத்தம்பி நமசிவாயம் ஜே.பி.**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

— யாழ். ஐக்கிய வியாபாரச்சங்கம்.

(56693)

உ
கணபதி துணை

# சிவ தீட்சை

இடம்:- கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீவதரிபீட விநாயகர் ஆலயம் (இலந்தைக்குளம்)
திகதி:- 10-6-98 புதன்கிழமை
நேரம்:- மு.ப. 9.00 மணியில் இருந்து 12.00மணி வரை

9 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சிவதீட்சை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இங்ஙனம்.
ஆலய பரிபாலன சபை.

(56682)

**JAFFNA COLLEGE ALUMINI ASSOCIATION**

# JAFFNA COLLEGE 175th ANNIVERSARY CELEBRATION

## FELLOWSHIP LUNCH

Old Students of Jaffna College who wish to Join the Fellow Ship Lunch on 26 - 06 - 1998 are requested to obtain the Lunch Ticket from Jaffna College Undergraduate Department, Hospital Road, Jaffna.
OR. from Jaffna College Office, Vaddukoddai.

FEESI RS. 100.00 PER PERSON

K. SELVARAJAH
HONY. SECRETARY

(C/ 3950)

# கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்
**உயர்திரு. யோசேப் சேவியர் செல்வநாயகம்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**சவிரிமுத்து யோசேப்**

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியையும், மாணவிகளும்,
கிராம அபிவிருத்திச் சங்கம்,
தையற் பயிற்சி நிலையம்,
நாரந்தனை.

(56664)

# கண்ணீர் அஞ்சலி

**செ. பாலசுப்பிரமணியம்**
கனடா

தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வழிபடுநர் சபையை ஆரம்பித்தவரும், மேற்படி சபையின் போஷகரும், ஆலய முன்னேற்றத்திற்கு சிறுபராயந் தொட்டு பல வழிகளிலும் பெருந் தொண்டாற்றியவரும் கும்பாபிஷேகதின 1008 சங்காபிஷேக உபயகாரருமான, கொக்குவில், தலையாழி எம். எஸ். துரை குடும்பத்தினரின் மகனுமாகிய திரு. செ. பாலசுப்பிரமணியம் 09 - 04 - 1998 இல் கனடாவில் காலம் சென்றதையிட்டு எமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ ஞானவைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

— ஆலய பரிபாலன சபை

(56696)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆமை இறைச்சி சாப்பிட்ட மேலும் ஐவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 8

புங்குடுதீவுப் பகுதியில் சமைத்த ஆமை இறைச்சியை சாப்பிட்டதால் பாதிக்கப்பட்டவர்களில் மேலும் ஐவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் சிவராசா அனுசுயா (வயது-17), நாகமணி முருகேசு (வயது-65), கந்தப்பு ஜெயரட்ணசிங்கம் (வயது-37), ஆகியோரும் நேற்று தவராசா சுஜிதா (வயது-4) என்பவரும் அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை சிவராசா ரனிஸ்ரன் (வயது-13) என்பவர் அனுமதிக்கப்பட்டார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரி அதி தீவிர சிகிச்சைப் பிரிவிலும், நேற்று அனுமதிக்கப்பட்ட தவராசா சுஜிதா அவசர சிகிச்சைப் பிரிவிலும் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

ஆமை இறைச்சி சாப்பிட்டு நான்கு நாள்களின் பின்பே இவர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது.

இவர்களுக்கு சிகிச்சை அளித்துவரும் டாக்டர்கள் கருத்து தெரிவிக்கையில், இவர்கள் சாப்பிட்ட ஆமை ஏதாவது நச்சுப் பொருளை உட்கொண்டு அதன் உடலில் நச்சுத் தன்மை பரவி இருந்திருக்கலாம், அல்லது நோய் வாய்ப்பட்ட ஆமையாக இருக்கலாம் எனத் தெரிவித்தனர்.

மேலும் இந்த இறைச்சியைச் சாப்பிட்டவர்களில் சிலர் நாள் செல்லச் செல்ல நச்சுத்தன்மையால் பாதிப்படைகின்றனர் எனவும், இந்த இறைச்சியை உண்ட அனைவரும் உடனடியாக வைத்தியர்களை நாடி உடன் சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

15 குடும்பங்களுக்கு மேல் இந்த ஆமை இறைச்சியை உட்கொண்டனர் எனவும்—அவர்களில் இதுவரை யாழ். ஆஸ்பத்திரியிலும், ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியிலும் 18 பேர் வரையே சிகிச்சை பெறுகின்றனர் எனவும், இறைச்சி சாப்பிட்ட சிலரால் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தின் ஆரம்பத்தில் இரு சிறுவர்கள் உயிரிழந்தது தெரிந்ததே. (இ-15)

# மின்மாற்றி பாதுகாப்புக்கு தனிப் பொலீஸ் பிரிவு

## பொலீஸ் மா அதிபர் கருத்து

கொழும்பு, ஜூன் 8

நாட்டில் உள்ள மின் மாற்றிகளுக்குப் பாதுகாப்பு வழங்கப் பொலீஸாரால் இயலாது. அவ்வாறு பாதுகாப்பு வழங்க 'மின் மாற்றி பொலீஸ் சேவை' ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

பொலீஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுரு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் தொடர்ந்து மின் மாற்றிகள் தகர்க்கப்படுகின்றன என்பதற்காக மின்மாற்றிகள் அனைத்துக்கும் பொலீஸ் பாதுகாப்பு வழங்க முடியாது. வீதிரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுப் பாதுகாப்பு வழங்குவதைத் தவிர பொலீஸாரால் வேறு எதனைச் செய்ய முடியும்?

மின்மாற்றிகள் அடிக்கடி தகர்க்கப்படுவதைத் தடுப்பதற்காக நாம் முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொண்டு வருகிறோம். ஆனாலும் அனைத்து மின் மாற்றிகளுக்கும் பொலீஸாரால் பாதுகாப்பு வழங்க முடியாது. அப்படி பாதுகாப்பு வழங்க வேண்டுமெனில் அது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சே உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்—என்றார்.

(இ-3)

# தீ காயத்தால் பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

படுக்கையில் குப்பி விளக்கு தட்டுப்பட்டு தீப்பற்றி எரிந்ததாகத் தெரிவித்து உடல் பூராகவும் எரிந்த நிலையில் கடந்த 27 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் மாலை அங்கு மரணமானார்.

உடுவில் ஆலடியைச்சேர்ந்த இந்திரன் இராசகுமாரி (வயது 30) என்ற நான்கு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார்.

மரண விசாரணையின் பின் சடலம் கணவனிடம் ஒப்படைக்கப்பட்டது.

(இ-15)

# தீ மிதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

கந்தர்மடம் அரசடி வீதி அருள்மிகு செல்வநாகபூசணி அம்பாள் திருக்கோயில் வைகாசி விசாக தீ மிதிப்பு வைபவம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பூசை பொங்கலுடன் ஆரம்பமாகிப் பிற்பகல் 4 மணிக்கு தீ மிதிப்பு நடைபெறவுள்ளது.

(ஐ-8)

# கைதடி வயோதிபர்கள் ஆலயங்களுக்கு சுற்றுலா

நல்லூர், ஜூன் 8

கைதடி முதியோர் இல்லத்தைச் சேர்ந்த சுமார் 25 முதியவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வல்லிபுரக்கோயிலுக்கு வழிபாட்டிற்காக அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

அதைத் தொடர்ந்து முக்கிய ஆலயங்களில் உற்சவ காலங்களின்போது குறிப்பிட்ட ஆலயங்களுக்கு பகுதி பகுதியாக இவர்களை அழைத்துச் செல்வதெனவும், அரசினர் முதியோர் இல்ல ஆலோசனைச்சபை தீர்மானித்துள்ளது.

இதற்கான செலவினங்களை மேற்படி சபையின் உறுப்பினர்கள் மற்றும் இப்பகுதியைச் சேர்ந்த பல நோ. கூ. சங்கங்கள் பொறுப்பேற்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# நிலப்பரப்பு வசதிகள் இல்லாததால் பல்கலை. அபிவிருத்தி பின்னடைவு

## துணைவேந்தர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 8

காணிவசதிகள் இல்லாமையால் யாழ்.பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்று யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தினால் யாழ். நகரில் ஆரம்பிக்கப்பட்ட 'சிற்றிஹோல்' திறப்பு விழா வைபவத்தில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு உரையாற்றும் போது மேலும் கூறியதாவது:-

பல்கலைக்கழக அபிவிருத்திக்கு காணிகள் வேண்டும். யாழ். நகரப் பகுதி, நல்லூர், கோப்பாய் போன்ற பகுதிகளில் பல்கலைக்கழகத்துக்கு காணிகள் தேவைப்படுகின்றன. குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள மக்களில் எவராவது எமக்கு காணிகளை வழங்கி உதவினால் பேருதவியாக இருக்கும்.

யாழ்ப்பாண மக்கள் நன்கொடைகள் வழங்குவதில் முன்னிற்பவர்கள். யாழ்ப்பாணத்திலுள்ள 440 பாடசாலைகளில் 400 பாடசாலைகள் பொதுமக்கள் அன்பளிப்பாக வழங்கிய காணிகளில் ஆரம்பிக்கப்பட்டன. அதேபோல் இங்குள்ள சனசமூக நிலைய கட்டடங்கள் கோயில் கட்டடங்கள் யாவும் மக்களினால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட காணிகளிலே இருக்கின்றன.

இதே போன்று யாழ். பல்கலைக்கழகத்திற்கு வேண்டிய காணிகளையும் மக்கள் மனமுவந்து வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள 'சிற்றிஹோல்' கட்டடம் மற்றும் காணி மலாயன் பெஞ்சனியர் சங்கத்தினால் எவ்வித நிபந்தனைகளுமின்றி பல்கலைக்கழகத்துக்கு வழங்கப்பட்டது.

1930, 40 களில் மலேசியா சென்று உழைத்த எமது பெரியவர்களின் நலனுக்காக அவர்களினால் நிறுவப்பட்டது இந்தக் கட்டடம். தற்பொழுது 114 பேருக்கு ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா மலாயன் ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

யாழ். நகரின் மத்திய வியாபார வலயத்தின் மத்தியிலே இந்த 'சிற்றிஹோல்' அமைந்துள்ளதால் அது இங்குள்ள எல்லோருக்கும் பயன்தரக் கூடியதாக இருக்கும்.

கருத்தரங்குகள், கூட்டங்கள், கலந்துரையாடல்கள், இலக்கிய நிகழ்வுகள், சந்திப்புகள் போன்றவற்றை இந்த மண்டபத்திலே சிறப்பாக நடத்த முடியும்— என்று தெரிவித்தார்.

சிற்றிஹோல் மண்டபப் பெயர்ப்பலகையை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் திரை நீக்கஞ் செய்து வைத்தார்.

வரற்வேபுரையைபல்கலைக்கழக பதிவாளர் க. குணராசாவும் வாழ்த்துரைகளை யாழ். பிரதேச செயலர் பா. செந்தில் நந்தன் பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் நா.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் வழங்கினர்.

யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் ஜெ. ஜெயக்குமார் நன்றியுரை வழங்கினார். விழாவில் அரசதிணைக்கள தலைவர்கள் பல்கலைக்கழக அதிகாரிகள், [illegible] லையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-5)

# வலைப்பந்தாட்ட போட்டி; யாழ்.அணி சம்பியனானது

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சினால் நடத்தப்படும் மாவட்டங்களுக்கிடையிலான வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்ட அணி சாம்பியனானது.

திருகோணமலையில் நேற்று நடந்தஇறுதிப்போட்டியில் யாழ். மாவட்ட அணி வவுனியா அணியுடன் மோதியது.

மிக விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் யாழ். மாவட்ட அணி 45—19 என்ற புள்ளி வித்தியாசத்தால் வெற்றிபெற்று சாம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

பல வருடங்களுக்குப் பின்னர் யாழ். மாவட்ட அணி இவ்வருடம் இப்போட்டியில் பங்குபற்றியது.

இப்போட்டியில் கிளிநொச்சி, மன்னார்,முல்லைத்தீவு மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய ஐந்து மாவட்ட அணிகள் பங்கு பற்றியிருந்தன.

(அ-3)

# கருத்தரங்கும் பயிற்சி பட்டறையும்

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வர்த்தகத்துறை மாணவர்களின் நலன் கருதி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணி முதல் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கருத்தரங்கும், பயிற்சிப் பட்டறையும் நடைபெறவுள்ளன.

இந்த கருத்தரங்கை யாழ். பல்கலைக்கழக வணிக மாணவ மன்றத்தினர்ஒழுங்கு செய்துள்ளனர். (இ-8)

# நாணயக் குற்றி தொலைபேசி

சித்தங்கேணி, மானிப்பாய், சுன்னாகம் ஆகிய இடங்களில் நாணயக் குற்றி தொலைபேசி இணைப்பு நேற்று வழங்கப்பட்டது.

திருநெல்வேலியில் அமைக்கப்படும் நாணயக்குற்றி தொலைபேசி இன்று இயங்க ஆரம்பிக்கும் என்று ரெலிக்கொம் வடக்கு - கிழக்கு பொது முகாமையாளர் எஸ். கனகசூரியர் தெரிவித்தார்.

(இ-3)

(முன்வந்த செய்தி 7 ஆம் பக்கத்தில்)

# சமய சந்திதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 8

கந்தரோடை அருள்மிகு அருளானந்தப் பிள்ளையார் ஆலய மகோற்சவ தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், மாலை 5 மணிகு கொடியிறக்க வைபவமும் இடம்பெறும்.

(ஐ-8)

★ ★ ★

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிகு நடைபெறவுள்ளது.

பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் இயற்றிய பக்திப் பாமாலையுடன் திருப்புகழும் சேர்ந்த நயினை திரு. வி. மு. நவரத்தினத்தின் தெய்வீகத் தேனிசை பக்கவாத்தியங்கள் சகிதம் அங்கு இடம்பெறும்.

(ஐ 8)

★ ★ ★

ஏழாலை தெற்கு வசந்த நாகபூசணி அம்பாள்ஆலயத்தின் விசாகப் பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு அன்னதானத்துடன் நிறைவுறவுள்ளது.

(ஐ-8)

★ ★ ★

அனலைதீவு அருள்மிகு எழுமங்கை நாச்சிமார் கோயில தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது. (ஐ-ரீ)

★ ★ ★

மட்டுவில் தெற்கு வேரக்கேணி கந்தசாமி கோயில் தேர்த்திருவிழா இன்று காலை 8 மணிக்கும், தீர்த்தத் திருவிழா நாளை காலை 9-00 மணிக்கும் நடைபெறும்.

(இ-31)

★ ★ ★

உசன் அருள்மிகு ஸ்ரீ கந்தசாமி ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா இன்று காலை 8-00 மணிக்கு நடைபெறும்.

நாளை காலை 6-00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 10 ஆம் திகதி புதன் பிற்பகல் 3-00 மணிக்கு பூங்காவனமும் திருக்கல்யாணம் திருவிழாவும் இடம் பெறும்.

(இ-30)

★ ★ ★

சித்தன்கேணி அருள்மிகு ஸ்ரீமகாகணபதிப்பிள்ளை யார் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை நடைபெறும்.

நாளை பூரணை தினம் தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

(இ-30)

★ ★ ★

இருபாலை வேளாத்தோப்பு அருள்மிகு ஸ்ரீமதுரை மகா முத்துமாரி அம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று காலை நடைபெறும்.

நாளை பூரணைநன்னாளில் தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

(இ-30)

★ ★ ★

நுணாவில் மேற்கு அருள்மிகு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கும், தீர்த்தத்திருவிழா நாளை காலை 10-30 மணிக்கும் நடைபெறும்.

மகோற்சவம்—ஆலய பிரதமகுரு கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றுவருகின்றது.

(இ-31)

★ ★ ★

நாரந்தனை கர்ணந்தோட்டம் அருள்மிகு ஸ்ரீ கந்தசாமி ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இன்றும் தீர்த்தத் திருவிழா நாளையும் இடம்பெறும். (இ-30)

★ ★ ★

கொழும்புத்துறை மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் — ஐயனார் ஆலயத்தில் வைகாசி விசாகப் பொங்கல் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகி விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்.

(இ-30)

★ ★ ★

வேலணை மேற்கு பெரியபுலம் ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா இன்றும், தீர்த்தத் திருவிழா நாளையும் இடம்பெறும்.

(இ-30)

★ ★ ★

காரைநகர் திக்கரை அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வைகாசி விசாகத் திருவிழா இன்று காலையும், கும்பாபிஷேகம் எதிர்வரும் 11 ஆம் திகதியும் இடம்பெறும்.

வருடாந்தத் திருவிழா 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (இ-30)

★ ★ ★

சரசாலை நுணுவில் அருள்மிகு ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று காலை 8.00 மணிக்கு நடைபெறும். நாளை காலை 8 00 மணிக்கு பூரணை தினம் தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் சிவன் கும்பாபிஷேகத்தில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள்

திருநெல்வேலி, ஜூன் 8

'ஈழத்து சிதம்பரம்' என்று அழைக்கப்படும் காரைநகர் சிவன்கோயில் மகாகும்பாபிஷேகம் நேற்றுக்காலை சிறப்பாக நடைபெற்றது.

நவாலி பிரதிஷ்டா சிரோன்மணி சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமைக் குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்திவைத்தார்.

யாழ். குடாநாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்து போக்குவரத்து கஷ்டங்களுக்கு மத்தியிலும் பல ஆயிரக் கணக்கான பக்தர்கள் உற்சவத்தில் கலந்து கொண்டனர்.

கும்பாபிஷேக கிரியைகள் நடைபெற்றதை அடுத்து நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்தினார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, ஆறு. திருமுருகன் ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

ஆலயத்தின் வடக்கு வீதியிலுள்ள காரைநகர் மாணிக்கவாசகர் மடாலயத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தினர் தாகசாந்தி நிலையம் ஒன்றை அமைத்திருந்தனர்.

மகாகும்பாபிஷேகத்துக்கு வெளியிடங்களிலிருந்தும், யாழ். நகரிலிருந்தும் சென்ற அடியார்கள் பொன்னாலைச் சந்தியில் நேற்றுக் காலை நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி இருந்தது என்று கூறப்படுகிறது.

காலையில் பஸ்களிலும் ஏனைய வாகனங்களிலும் பொன்னாலைச்சந்திக்கு வந்தவர்களின் தேசிய அடையாள அட்டைகள் சுடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்டு அதற்குபதிலாக கையால் எழுதப்பட்ட துண்டு ஒன்று கொடுக்கப்பட்டது.

இதனை பெறுவதற்கு அவர்கள் சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் அங்கு கியூ வரிசையில் காத்து நிற்க வேண்டியிருந்தது.

அனைவரும் கடுமையாகப் பரிசோதிக்கப்பட்ட பின்னரே பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

திரும்பிவரும் போதும் அங்கு பொன்னாலையில் வைத்து கடுமையாகப் பரிசோதனை செய்யப்பட்டனர்.

இதேவேளை வடபிராந்திய போக்குவரத்து சபையின் பஸ் சேவைகளும் மிகவும் குறைவாகவே இருந்தன.

பஸ்களில் அளவுக்கதிகமானோர் ஏற்றப்பட்டதால் பலத்த சிரமத்தின் மத்தியிலேயே பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது.

பொன்னாலைச் சந்தியிலிருந்து காரைநகர் சிவன் கோயில் வரை இரு பஸ்களே சேவையில் ஈடுபட்டன,

(இ-135)

# குண்டு வெடிப்புக்கு பாகிஸ்தானில் 23பேர் பலி!

## ஓடும் ரயிலில் சம்பவம்

புதுடில்லி, ஜூன் 8

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் பயணிகள் நிறைந்த ரயில் பெட்டி ஒன்றில் நேரம் குறித்த குண்டு ஒன்று வெடித்ததில் 23 பேர் உயிரிழந்தனர். 75 பேருக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கராச்சிக்கும், பெஷாவருக்கும் இடையில் பயணம் மேற்கொண்டிருந்த சமயமே நேற்று அதிகாலை 4 மணிக்கு இக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

ரயிலில் பயணிகள் நல்ல உறக்கத்தில் இருந்த சமயமே இக் குண்டு வெடித்தது. குண்டு வெடிப்பின் காரணமாக ஏற்பட்ட அதிர்வால் ஓடிக்கொண்டிருந்த ரயில் நின்றுவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அதே சமயம் இந்தியாவின் 'றோ' அமைப்பினரே இந்தக் குண்டு வெடிப்புக்கு காரணம் எனவும்—

அதற்குத் தேவையான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும்— பாகிஸ்தானின் தகவல் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை எனவும்—

இக் குண்டு வெடிப்புக்கும் 'றோ' அமைப்புக்கும் எந்த விதமான தொடர்புகளும் இல்லை எனவும்— இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

(இ-9)

# சிப்பாய் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜூன் 8

மட்டக்களப்பு சித்தாண்டி இராணுவ முகாமில் இராணுவ வீரரொருவர் தனக்குத் தானே வேட்டுக்களைத் தீர்த்துத் தற்கொலைசெய்து கொண்டார்.

நேற்றுக் காலை 5-30 க்கு இச்சம்பவம் இடம்பெற்றது.

திக்குவெல்ல வாசியான தி. சொய்ஸா (24 வயது) என்பவரே மேற்படி வீரராவார்.

இவர் அண்மையில் மீள சேவையில் இணைந்தவர் எனத் தெரியவருகின்றது.

(இ-21)

# நமசிவாயத்தின் இறுதிக்கிரியை

யாழ்ப்பாணம், ஜூன் 8

கடந்த வெள்ளிக்கிழமை வெட்டிக் கொலை செய்யப்பட்ட யாழ். வர்த்தகர் சி. நமசிவாயத்தின் இறுதிக்கிரியைகள் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன.

இவ் இறுதிக்கிரியைகளில் பங்குபற்ற தமிழர்விடுதலைக் கூட்டணி பிரமுகர்களான வீ. ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா ஆகியோர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இறுதிக்கிரியைகள் முடிந்த பின்னர் நேற்றுமாலை யாழ். நகரத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் அவரது வீட்டுக்குச் சென்று அவரது மனைவி, பிள்ளைகள் ஆகியோருடன் பேசி துக்கம் தெரிவித்தார்.

(இ-3)

# வடமேல் மாகாண சபையை கலைக்குமாறு ஐ. தே. க கோரும்

கொழும்பு, ஜூன் 8

ஐ. தே. கட்சியின் ஆட்சியிலுள்ள வடமேல் மாகாண சபையையும் கலைத்துவிட்டு தேர்தல் நடத்துமாறு அரசிடம் ஐ. தே. க கோரிக்கை விடுக்க தீர்மானித்துள்ளது.

இத்தகவலை ஐ. தே. க. பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறலை நேற்றிரவு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

வடமேல் மாகாண சபையின் பதவிக்காலம் எதிர் வரும் நவம்பர் மாதத்துடன் நிறைவுபெறுகின்றது.

ஐ. தே. க உத்தேச மாகாண சபைத் தேர்தல்களுக்கான வேட்பாளர்கள் பட்டியலில் 75 சதவீதத்தை பூர்த்தி செய்துவிட்டது.

நாளை மறுதினம் தேர்தல் ஆணையாளர் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளார்.

மேற்படி சந்திப்பில் வடமேல் மாகாணசபை கலைப்பு குறித்தும் பேசப்படும் என்றார்.

(இ-21)

# சரசாலையில் மோட்டார் குண்டு

யாழ்ப்பாணம, ஜூன் 8

சரசாலை தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் படையினர் ரோந்து வந்த சமயம் சிறு கண்ணி ஒன்றுடன் பொருத்தப்பட்டிருந்த மோட்டார் குண்டு ஒன்றைக் கைப்பற்றினர் எனப் பலாலி இராணுவ தலைமையகச் செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

பின்னர் அக்குண்டு இராணுவத்தின் பொறியியல் பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

(இ-3)

# சார்க் உச்சி மாநாடு குறித்து ஆராய்ந்தனர்

கொழும்பு, ஜூன் 8

இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் எதிர்வரும் சார்க் உச்சி மாநாடு பற்றிநேற்று ஆராந்தார்கள்.

இந்தியாவும், பாகிஸ்தானும அண்மையில் அணு வெடிப்பு பரிசோதனைகளை நடத்தியதை அடுத்து இந்தப் பிராந்திய உச்சி மாநாடுமுக்கியத்துவம் பெறுவதாக பங்களாதேஷ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த உச்சி மாநாட்டின் போது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுககும் இடையில் அதிகரித்து வரும் பதற்ற நிலையைத் தணிப்பது பற்றி முக்கிய கவனம் செலுத்தப்படும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சரும், பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சரும் தெரிவித்தனர்.

சார்க் உச்சி மாநாடு அடுத்த மாதம் 20 ஆம்திகதி முதல் 22 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற உள்ளது.

(இ-9)

# விசர் நாய் கடித்து மரணம்

விசர் நாயினால் கடியுண்ட குடும்பஸ்தர் ஒருவர் 19நாள்களின் பின் மரணமானார்.

நவிண்டிலைச் சேர்ந்த தச்சுத் தொழிலாளியான க. சின்னத்தம்பி (வயது 53)என்பவரே மரணமானவர் ஆவார்.

இவர் தனது தொழில் நிமித்தம் தென்மராட்சிப் பகுதிக்கு சென்ற சமயமே அங்கு விசர் நாயினால் கடியுண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் அன்றைய தினம் ஏழு பேரை அந்த விசர் நாய் கடித்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவரது மரணம் சம்பந்தமான விசாரணை மந்திகை மருத்துவமனையில் நடைபெற்றது.

(இ-109)


எமது ஒறிஜினல் வெளியீடு!

★ பாலைவனப் பறவைகள்
★ ராஜகுமாரன்
★ பொலீஸ்காரன் மகள்

வீடியோ CD வெளியீடு!

★ சந்திரோதயம்
★ அஞ்சலி
★ புதிய முகம்
★ மன்னவா
★ நான் ஆணையிட்டால்
★ உரிமைக் குரல்
★ நான் வாழ வைப்பேன்
★ அவன் தான் மனிதன்
★ வசந்த மாளிகை
★ நெஞ்சிருக்கும் வரை

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/3969)



எமது இன்றைய வெளியீடுகள்!

கார்த்திக் நடித்த
கூட்டாளி

செல்வா நடித்த
கோல்மால்

ரகுமான் நடித்த
போர்க் காலம்

சுரேஷ் கோபியின்
மகாத்மா

வீடியோ CD வெளியீடு!
இது தான் காதல்

★ புதிய போஸ்டர்களும் விற்பனைக்குண்டு.

சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/3970)


## புலிகளுக்கு.

(முதலாம பக்கத் தொடர்)

அவுஸ்திரேலியாவில்உள்ள தமிழ் அமைப்புகள் இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதாகக் கூறித்தான் நிதி சேகரிக்கின்றனவா என்று ரூபவாஹினி செய்தியாளர் கேள்வி கேட்டார்.

அதற்கு பதில் அளிக்கையிலேயே கதிர்காமர் புலிகள் மீது குற்றஞ் சுமத்தினார்.

(இ-9)

## ஐ. தே. க---

(முதலாம் பக்கத் தொடர்)

ரான கே. கணேசலிங்கத்தை நிறுத்த முயற்சி எடுக்கப்பட்ட போதும், பலர்அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)


## கருத்தரங்கு

பொருள்: "தம்பதியர் உறவின் உளவியல்"

கருத்துரை வழங்குபவர்:
அருட்திரு ம, போல் நட்சத்திரம் அ.ம.தி. (M A.)
காலம்: 09 - 06 - 1998 செவ்வாய்க்கிழமை
நேரம்: 03 மணி
இடம்: "அகவொளி"
குடும்ப வளத்துணை நிலையம்,
131, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர்

(56634)


## ஜனாதிபதி ..

(முதலாம் பக்கத் தொடர்)

அதன்பின்பு "சண்டே டைம்ஸ்" அந்தச் செய்தியை தயாரித்து இராணுவத் தலைமையகத்துக்கு அனுப்பியது. அது தணிக்கை செய்யப்பட்டது.

பாதுகாப்பு நிலைமை தொடர்பான கட்டுரையில், அண்மையில் ஜனாதிபதி உரையாற்றிய பேச்சும் இடம்பெற்றது. அதுவும் தணிக்கை செய்யப்பட்டது.

இலங்கையில் முதன் முதலாக இராணுவ அதிகாரியிடம் தணிகை விடயம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

எமக்குச் சுதந்திரம் கிடைத்து 50 வருடங்கள் முடிவடைந்ததெனப் பெப்ரவரியில் ஆனந்தம் அடைந்தோம். 50 ஆண்டுகள் ஜனநாயகம் பேணப் பட்ட நாட்டிலேயே இந்தச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இப்படி அவர் தெரிவித்தார்.

(இ319)

## யுத்த செய்தி தடை...

(முதலாம் பக்கத் தொடர்)

"தணிக்கை செய்யப்பட்டுள்ளது" என்று எழுதி வெறுமையாக வெளியிட்டுள்ளன.

இத்தடையை நீக்குமாறு இலங்கையில் உள்ள வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் சங்கமும் அரசுக்கு அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு அனுப்பியுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்தம் தொடர்பான செய்திகளை அரசு தடை செய்திருப்பதானது மிகவும் வருந்தத்தக்கதும் அரசின் சுதந்திர ஊடகக் கொள்கைக்கு முரணானதுமாகும்.

இலங்கையிலுள்ள வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் எப்போதும் செய்திகள் தொடர்பாக மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து வருகின்றனர்.

எனவே இலங்கை வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கம் இத்தடையை உடனடியாக நீக்குமாறு அரசைக் கோருகிறது.

எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் கைவிலங்கிடப்படாத பத்திரிகைச் சுதந்திரம் அடிப்படைத் தேவை என்பதை வெளிநாட்டுப் பத்ரிகையாளர் சங்கம் நம்புகின்றது.

செய்தித் தணிக்கையானது அதற்கு எதிரான விளைவுகளையே கொண்டுவருவதுடன் வதந்திகளையே பரவச் செய்யும் — என்றுள்ளது.

அதே நேரம்— யுத்தம் தொடர்பான செய்திகளின் உண்மைநிலைமைகளை மூடிமறைப்பதற்காகவே யுத்தம் தொடர்பான செய்திகளை வெளியிடுவதற்கு அரசு தடைவிதித்துள்ளது' என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்

(8-3-9-10-21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] யார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்கள் [illegible] மனையில் 08 -06-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org